**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08042024-7827

Volume: 8

Issue: 4

Month: April

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.01.2024

Accepted: 25.03.2024

Published: 01.04.2024

Citation:
Bhagirathimoses, & Srikanthan, S. (2024). Marginal View of Vakaraivedar Community: An Anthropological Study. *Shanlax International Journal of Tamil Research,* 8(4), 146–152.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i4.7827

*Corresponding Author:
rathyms@yahoo.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Marginal View of Vakaraivedar Community: An Anthropological Study

**Bhagirathimoses**
*Senior Lecturer, Sociology and Anthropology*
*Eastern University, Sri Lanka*
*https://orcid.org/0009-0004-4729-7662*

**S. Srikanthan**
*Senior Lecturer, Department of Sociology*
*University of Jaffna, Sri Lanka*

**Abstract**

*Batticaloa district of Sri Lanka is a region of different ethnic groups. Among them, the hunter community is considered to be the primitive tribe. The community lives in groups in some parts of Batticaloa. There are 764 hunter families in 12 villages of Mankerni, Kayankerni, Panichchankerni, Madurangenikkulam, Kirimichai, Uriyankattu, Kathiraveli, Katumurivu, Amanthanaveli, Palchenai, Kandaladi and Punanai with 2757 Veddar families. Tamil people live here predominantly. The hunter community lives in isolation and mingle with them. In the social hierarchy, the hunters are seen as the downtrodden, the oppressed or the marginalized. In this region, the Veddar community continues to be seen as a group of people who dominate or dominate the political, economic, religious and educational fronts or the rest as the upper class. Due to this continuous trend, the community has to face many adverse implications. As a result, their future is at stake. In such a situation, this study is an anthropological study of the impact of the ancient community of the Veddar community being seen as a marginalized people.*

***Keywords: Antiquity, Hunter, Marginalization, Society, Influence, Stratification.***

**References**

1. Deraniyagala, S. U. (1992). The Prehistory of Sri Lanka: An Ecological Perspective. Memoir Volume 8, Part I-II. Department of Archaeological Survey, Sri Lanka.
2. Knox, Robert. (1681). An Historical Relation of the Island of Ceylon. Glasgow: James MacLehose and Sons.
3. Lanka, Ranawera. (2015). A Case Report: The Coastal Vedda Community Trapped in the Civil War in Sri Lanka. Faculty of Medicine, University of Kelaniya Sri Lanka, ww.researchgate.net
4. Premakumara De, Silva., Asitha G, Punchihewa. (2011). Socio- Anthropological Research Project on Vedda Community in Sri Lanka. Ministry of Culture and the Arts Government of Sri Lanka.
5. Seligmann, C. G., Brenda Z, Seligmann. (1911). The Veddas. Cambridge: Cambridg University Press.
6. Thambiah, S.J., (1986).Ethnic Fratricide and the Dismantling of Democracy.Chicago: University of Chicago Press.
7. Turner. V. (1973). Passages, Margins and Poverty: Religious Symbols of Communitas.Cornell University Press.

# வாகரை வேடர் சமூகம் மீதான விளிம்புநிலைப் பார்வை: மானிடவியல் ஆய்வு

***பகீரதி மோசேஸ்***
முதுநிலை விரிவுரையாளர் - சமூகவியல் மற்றும் மானிடவியல்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***முனைவர் ச. சிறிகாந்தன்***
முதுநிலை விரிவுரையாளர் - சமூகவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***
*பல்வேறுபட்ட இனக்குழுமங்கள் வாழும் பிரதேசமாக இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகிறது. அவர்களில் வேடர் சமூகமே தொன்மை இனக்குழுவாகக் கருதப்படுகிறது. இச்சமூகத்தினர் மட்டக்களப்பின் சில இடங்களில் குழுக்களாக வாழ்ந்து வருகிறார்கள். அவ்வாறு வேடர்கள் வாழும் இடங்களில் வாகரை முக்கியமானதொரு பிரதேசமாகும். மாங்கேணி, காயங்கேணி, பனிச்சங்கேணி, மதுரங்கேணிக்குளம், கிரிமிச்சை, ஊரியங்கட்டு, கதிரவெளி, கட்டுமுறிவு, அமந்தனாவெளி, பால்சேனை, கண்டலடி, புணாணை ஆகிய 12 கிராமங்களில் உள்ள 764 வேடர் குடும்பங்களில் 2757 வேடர் இன மக்கள் வாழ்கிறார்கள். இங்கு தமிழ் மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்களுடன் கலந்தும் தனித்தும் வேடர் சமூகம் வாழ்கிறது. சமூக அடுக்கமைவில் வேடர் சமூகம் அடித்தட்டு மக்களாக, ஒடுக்கப்பட்டவர்களாக அல்லது விளிம்புநிலை மக்களாகவே பார்க்கப்படுகின்றனர். இப்பிரதேசத்தில் அரசியல், பொருளாதார, சமய, கல்வி முனைகளில் ஆதிக்கம் அல்லது அதிகாரம் செலுத்தும் மக்கள்குழுவாக அல்லது உயர் வர்க்கமாக ஏனையோர் காணப்பட வேடர் சமூகம் விளிம்புநிலை மக்களாகவே தொடர்ந்தும் பார்க்கப்படுகின்றனர். இவ்வாறானதொரு சூழலில் இப்பிரதேசத்தின் தொன்மைச் சமூகமான வேடர் சமூகத்தினர் விளிம்புநிலை மக்களாக பார்க்கப்படுவதனால் ஏற்படும் தாக்கங்களை கள ஆய்வு செய்து வெளிக்கொண்டுவரப்பட்ட மானிடவியல் ஆய்வாக இவ் ஆய்வு காணப்படுகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *தொன்மை, வேடர், விளிம்புநிலை, சமூகம், தாக்கம், அடுக்கமைவு, இலங்கை, மானிடவியல் ஆய்வு*

## அறிமுகம்

மட்டக்களப்பு வாகரையில் வாழும் தொன்மை இனக்குழுவான வேடர் சமூகம் சமூக அடுக்கமைவில் அடித்தட்டு மக்களாக, ஒடுக்கப்பட்டவர்களாக அல்லது விளிம்புநிலை மக்களாகவே பார்க்கப்படுகின்றமை ஆய்வினூடாகப் பெறப்பட்டுள்ளது. அதனால் அம்மக்கள் பல்வேறுபட்ட தாக்கங்களை எதிர்கொள்கின்றனர். வாகரையின் மாங்கேணி, காயாங்கேணி, பனிச்சங்கேணி, மதுரங்கேணிக்குளம், கிரிமிச்சை, ஊரியங்கட்டு, கதிரவெளி, கட்டுமுறிவு, அமந்தனாவெளி, பால்சேனை, கண்டலடி, புணாணை ஆகிய கிராமங்களில் வாழுகின்ற வேடர் இன மக்களினது வாழ்வாதாரம், குடும்ப அமைப்பு, உறவுமுறைக் கட்டமைப்பு, குடியிருப்புமுறை, புழங்கு பொருட்கள், வழிபாட்டு முறைகள், மொழியும் தொடர்பாடலும், ஆட்சி அதிகாரக்

கட்டமைப்பு, சடங்குகள், வழக்காறுகள், உணவுமுறை, மருத்துவமுறை, சமூக விழுமியங்கள், நம்பிக்கைகள், கலைசார் மரபுகள், விழாக்கள், விளையாட்டுக்கள் உள்ளிட்ட வேடர்களது வாழ்வியல் அம்சங்களும், இப்பிரதேசத்தில் நிலவுகின்ற அரசியல், பொருளாதார, சமய, கல்வி முனைகளில் ஆதிக்கம் அல்லது அதிகார நிலைமைகளும் இதனை தெளிவாக உணர்த்துகின்றன. முதல்நிலை தரவுகளை அடிப்படையாகக்கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய முதல்நிலைத் தகவல்களைச் சேகரிப்பதற்காக பிரதான தகவலாளியுடனான நேர்காணல் (Key Informant Interview), பங்கேற்று உற்றுநோக்குதல் (Participatory Observation), குழுக்கலந்துரையாடல் (Focus Group Discussion), தனிநபர் விடய ஆய்வு (Case study) ஆகிய முறைகள் பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றினூடாக பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன. முடிவுகளின் அடிப்படையில் விதந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

**வாகரை வேடர்கள் விளிம்புநிலை மக்களாகப் பார்க்கப்படல்**

வாகரைப் பிரதேச சமூக அடுக்கமைவில் வேடர் சமூகம் அடித்தட்டு மக்களாக, ஒடுக்கப்பட்டவர்களாக அல்லது விளிம்புநிலை மக்களாகவேப் பார்க்கப்படுகின்றனர். பின்காலனித்துவக் கோட்பாடு, "Subaltern" (விளிம்புநிலை மக்கள்) என்ற சொல் தாழ்ந்த சமூக வகுப்புகள் மற்றும் சமூகத்தின் விளிம்புகளுக்கு இடம்பெயர்ந்த பிற சமூகக் குழுக்களை விவரிக்கிறது. 'விளிம்புநிலை' என்பது விளிம்புகளில் உள்ள மக்களுக்கான வளங்கள், வாய்ப்புகள், தேர்வுகளின் சுதந்திரம் மற்றும் தனிப்பட்ட திறன்களின் வளர்ச்சி போன்றவற்றுக்கான அணுகலைத் தடுக்கிறது. அதிகார உறவுகளின் காரணமாக விளிம்புநிலை மக்கள் சமூகம் அல்லது இனக்குழுக்கள் பொருளாதார, அரசியல், சமூக மற்றும் கலாசாரப் பரிமாணங்களில் சமமற்ற வகையிலான பாகுபாடுகளை அனுபவிக்கின்றன. பின்காலனித்துவ ஆய்வுகள் மற்றும் விமர்சனக் கோட்பாட்டில், "Subaltern" (விளிம்புநிலை மக்கள்) என்ற சொல் சமூக, அரசியல் மற்றும் புவியியல் ரீதியாக ஏகாதிபத்திய காலனியின் அதிகாரப் படிநிலையிலிருந்தும் ஒரு பேரரசின் பெருநகர தாயகத்திலிருந்தும் ஒதுக்கப்பட்ட காலனித்துவ மக்களைக் குறிக்கிறது அல்லது அடையாளம் காட்டுகிறது. காலனித்துவ அரசியலில் அவர்களின் முகாமை மற்றும் குரல்களை மறுப்பதற்காக, சமூகத்தின் சமூக - பொருளாதார நிறுவனங்களிலிருந்து குறிப்பிட்ட மக்களையும் சமூக குழுக்களையும் ஒதுக்கிவைக்கும் மற்றும் இடமாற்றம் செய்யும் கலாசார மேலாதிக்கத்தை அடையாளம் காண அன்டோனியோ கிராம்சி "Subaltern" என்ற வார்த்தையை உருவாக்கினார்.

ரேனர் (Turner) தனது விளிம்புநிலை மக்கள் பற்றிய ஆய்வில் "இம்மக்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட குழுவின் பேராளர்களாக இருப்பர். அத்தோடு அவர்கள் சமூகம் பண்பாட்டுநிலைகளில் தனித்தன்மையுடன் விளங்குவர். சில சமயங்களில் ஒரு குழுவினர் மற்றொரு குழுவினருக்கு எதிர்நிலையினராகக்கூட இருப்பர்" என குறிப்பிடுகிறார்.

இவ்வாறான கருத்தியல்களின் பின்னணியில் வாகரை வேடர்களின் வாழ்வியலை ஆராயும் போது காலனித்துவத்திற்கு முன்னர் இயற்கையோடு இயைந்த, தன்னிறைவான, மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்துள்ளமையும் காலனித்துவம் நிலவிய மற்றும் பின்காலனித்துவம் நிலவுகின்ற இக்காலப்பகுதியிலும் விளிம்புநிலை மக்களாக நோக்குவதை அவதானிக்க முடிகிறது.

**விளிம்புநிலைப் பார்வை ஏற்படுத்தும் தாக்கங்கள்**

வாகரை வேடர் மீதான விளிம்புநிலைப் பார்வை ஏற்படுத்தும் தாக்கங்கள் பன்முகப்பட்டவை. சமூக கட்டமைப்புகள் அனைத்திலும் இத்தாக்கங்கள் காணப்படுகின்றன. ஆய்வின் வரையறைகருதி அரசியல், பொருளாதாரம், சமயம், கல்வி ஆகிய அம்சங்கள் மீதான தாக்கங்கள் இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன.

**அரசியல்**

காலனித்துவத்திற்கு முன்னர் வேடர் சமூகம் தமது வழிநடத்துனர்களை தலைவர்களாகக் கருதியது. அத்தலைவர்கள் தமது சமூகத்தை வழிநடத்தினார்கள். இயற்கையுடன் இயைந்த குழுமுறை வாழ்க்கையும் பரந்த வாழ்க்கையும் அவர்களிடையே காணப்பட்டது. அவர்களுக்கான தலைமைத்துவத்தை தமக்குளிருந்து அவர்களே உருவாக்கிக் கொண்டனர். காலனித்துவகால நவீன வரலாற்றில் ஐரோப்பிய ஆக்கிரமிப்பினால் இலங்கை மக்களிடையே அரசியல், பொருளாதார, கலாசார அம்சங்களில் அதிகமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மக்களிடையே புதிய சமூகப் பிரிவினர்களையும் தோற்றுவித்தது. தனித்துவமாக சமூக அந்தஸ்துடன் வாழ்ந்த வேடர்களின் தலைமைத்துவம் சிதைக்கப்பட்டது. வேடர்களின் தனித்துவ அடையாளங்கள் அழிக்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் முறைமையினூடாக, மக்களின் மத்தியில் நவீன அரசியல் போக்கு உருவானது. அதில் அனைத்து மக்கள் பிரிவினரும் பங்குபற்ற வாய்ப்பு வழங்கப்படவில்லை. வேடர் சமூகத்தினர் ஓரங்கட்டப்பட்டனர். பின்காலனித்துவ சூழலிலும் அந்நிலை தொடர்கிறது.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்ற வகையில் அரசியலில் ஈடுபடுவதற்கான உரிமை சகலருக்கும் உண்டு. தம்மைத் தாமே ஆள்வதற்காக மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்கிறார்கள். பாராளுமன்றம், மாகாணசபை, உள்ளூராட்சிச் சபைகள் என அனைத்து சபைகளுக்கும் இவ்வாறான தெரிவு இடம்பெறுகிறது. ஒவ்வொரு சமூகமும் இவற்றுக்காக தன்னுள்ளிலிருந்து புதிய பிரிவினரைத் தொடர்ச்சியாக உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால் வேடர் சமூகம் தமக்கான பிரதிநிதியினைத் தேர்தலில் வேட்பாளராக நிறுத்த முடியவில்லை. காரணம் விளிம்புநிலை மக்கள் என்ற பார்வையாகும். அதனால் அவர்களின் வாக்குகள் ஏனைய சமூகத்தவர்களுக்கு அளிக்கப்பட வேண்டியதாகவே காணப்படுகிறது. அவர்களுக்கான பிரதிநிதி இல்லாததால் வேடர் சமூகத்தின் அத்தனை அரசியல் அபிலாசைகளும் தாக்கத்திற்கு உள்ளாகின்றன.

**பொருளாதாரம்**

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்த வாகரை வேடர்கள் தமக்கான உணவு மற்றும் சுயதேவைகளைத் தமது சூழலில் கிடைத்தவற்றைக் கொண்டு பூர்த்தி செய்தார்கள். அதுவே அவர்களுக்கான பொருளாதாரமாகக் காணப்பட்டது. அந்நியர் வருகையின் பின்னர் காலனித்துவ காலத்தில் பொருளாதார முறைமைகள் மாற்றம் பெற்றன. பண்டங்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி, பகிர்வு, மற்றும் நுகர்வு போன்றவை ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் நிர்வகிக்கப்படும் ஒரு ஒழுங்குமுறையாக மாறியது. சூழ்நிலைகளுக்கேற்ப இருக்கும் இயற்கை வளம், மனித வளம், பண முதலீடு, தொழில்நுட்பம் ஆகியவற்றை நியாயமான முறையில் பயன்படுத்தி செல்வத்தைப் பெருக்குவதே பொருளாதார முறையின் நோக்கமாக மாறியது. அதனால் பொருளாதார ஏற்றத்தாழ்வு சமூகத்தை அளவிடுவதாக மாறியது. வேடர் சமூகம் பொருளாதார வளர்ச்சி குன்றிய சமூகமாக

மாறியது. ஒரு சமூகத்தில் அதன் வெவ்வேறு குழுக்களுக்கிடையே அல்ல தனிநபர்களுக்கிடையே இருக்கக்கூடிய பொருளாதார நிலையின் சமனற்ற தன்மையைக் காட்டியது. அப்போது வாகரை வேடர் சமூகம் பொருளாதாரத்தில் அடிநிலையினராக காணப்பட்டார்கள். ஆரோக்கியமான சமூகத்துக்கு அதன் அடிப்படை வாழ்க்கைத் தரம் சிறப்பாகவும், ஏற்றத்தாழ்வு குறைவாகவும் இருக்க வேண்டும். ஆனால் வாகரை வேடர் சமூகம் பொருளாதாரத்தில் விளிம்பு நிலையினராக மாறினர். வளங்களும் வாய்ப்புக்களும் மட்டுப்படுத்தப்பட்ட அன்றாடம் உணவினைப் பெறுவதற்கே அல்லல்படும் மக்களாக உள்ளனர்.

பின்காலனித்துவக் காலத்தில் இலங்கையில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை பலப்படுத்தும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டன. தற்பொழுது சமுர்த்தித் திட்டம் நடைமுறையில் உள்ளது. அதற்கு சட்டரீதியான பல்வேறு ஆவணங்கள் தேவை. அவை இவர்களிடம் இல்லை. அதனால் சமுர்த்தி உதவிகளும் ஒழுங்காக கிடைப்பதில்லை என அவர்கள் கூறுகிறார்கள். வாகரை வேடர் சமூகத்தவர்களுக்கு சொத்துக்களோ வளங்களோ மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கின்றன. விவசாயத்திற்குப் போதுமான காணிகளோ பெரிய குளங்களில் இருந்து நீர்ப் பாசனத்தைப் பெறுவதற்கான வாய்ப்புக்களோ இல்லை. கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தங்களால் அவர்கள் பல இடப் பெயர்வுகளைச் சந்தித்துள்ளனர். அதனால் அவர்களது இருப்பிடங்களையும் இழந்துள்ளனர். உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்த பின்னரும் கூட வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு பொருத்தமான உதவிகள் இவர்களுக்குக் கிடைக்கவில்லை. அரச வர்த்தக வங்கிகள் கூட அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்லது சொத்துக்கள் பிணையாகக் கொண்டிருப்பவர்களுக்கு மட்டுமே தமது கடன் சேவைகளை வழங்கியதால் நியாயமான வட்டிவீதத்தில் நிதித்தேவையைப் பூர்த்தி செய்தற்கான வாய்ப்புகளும் இல்லாமல் இருந்தது. அந்த நிலை தனியார் நுண்நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் நாள் கடன், கிழமைக் கடன்களை அணுகுவதற்கு அவர்களைத் தள்ளியது. இக்கடன்களின் அதிகூடிய வட்டிவீதமும் அறவீடுகளின் போதான முறைகேடுகளும் இவர்களைக் கடன்பொறிக்குள் சிக்க வைத்ததோடு பல குடும்ப பிரச்சினைகள் உருவாகவும் தற்கொலைகள் ஏற்படவும் வழிவகுத்தது. தொடர்ந்தும் தொழில் வாய்ப்புகள் இல்லாமையினால் அவர்களது பொருளாதாரநிலை மோசமடைந்து கொண்டே செல்கிறது.

**சமயம்**

கடவுள் நம்பிக்கையின் அடிப்படையிலான கோட்பாட்டமைப்புகளில் ஒன்று சமயம் அல்லது மதம். ஒரு கடவுள் அல்லது கடவுள்கள் மீதான நம்பிக்கையும் அது தொடர்பான செயற்பாடுகளும், சமயச் சடங்குகளும் மதத்தை குறிக்கிறது. வாகரை வேடர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்ததால் இயற்கையின் பல்வேறுபட்ட அம்சங்களைத் தெய்வங்களாக வழிபட்டனர். தமது மூதாதையர்களையும் வழிபட்டனர். காலனித்துவக் காலத்தில் காலனித்துவவாதிகளின் சமயங்களைப் பின்பற்றவும் வழிபடவும் செய்தனர். குறிப்பாகக் கத்தோலிக்க, கிறிஸ்தவ மதங்களை பின்பற்றலாயினர். பின்காலனித்துவ காலத்தில் வாகரையில் வாழும் தமிழ்ச் சமூகத்தினர் பின்பற்றும் சைவம் மற்றும் கத்தோலிக்க மதங்களைப் பின்பற்றுகின்றனர். அதிகமாக சைவசமயத்தையே பின்பற்றுகின்றனர். சைவத் தமிழர்கள் வேடர் சமூகத்தை ஒதுக்கு பவர்களாகவே காணப்படுகின்றனர். ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்களாக வேடர் சமூகத்தைக் கருதுகின்றனர். அதனால் கோயில் அமைத்தல், தெய்வங்களை

வழிபடல், சடங்குகள், வழிபாட்டிற்கான பொருட்கள் போன்ற பல விடயங்களில் ஓரங்கட்டப்பட்டவர்களாக வேடர்கள் காணப்படுகிறார்கள்.

கோயில் என்பது பிரதான சமய நிறுவனமாகும். அதனால் குடியிருப்புகளின் பிரதான இடங்களில் அமைக்கப்படும். இங்குள்ள சைவர்கள் பெருங்கோயில்கள் அமைத்தல், ஆகமம் சார்ந்து சமய நடவடிக்கைகளில் ஈடுபடல், பெருந்தெய்வ வழிபாட்டில் ஈடுபடல், திருவிழா மற்றும் சடங்குகளை விமரிசையாக நடாத்துதல், வழிபாட்டிற்கான ஆடம்பரப் பொருட்களைப் பயன்படுத்துதல் எனக் கட்டுப்பாடற்ற வகையில் செயற்படுகின்றனர். ஆனால் வேடர்கள் அவ்வாறல்லாமல் ஓரங்கட்டப்பட்ட நிலையிலேயே அவர்களது சமய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். வேடர்கள்தமது கிராமங்களில் அல்லது அங்குள்ள காடுகளில் கோயில்களை அமைக்கின்றனர். அவை ஆகமம் சார்ந்த கோயில்களாக அமைப்பதில்லை. பெரிய கோயில்களாகக் கட்டப்படுவதில்லை. பெருந்தெய்வங்களுக்கான கோயில்கள் கட்டுவதற்குக் கட்டுப்பாடுகள் உள்ளன. சடங்கில் பயன்படுத்தும் பொருட்களில் கட்டுப்பாடுகள் உள்ளன.

தற்காலத்தில் பெரிய கோயில்களாகக் காணப்படுகின்ற சில கோயில்கள் வேடர் மக்களால் ஆரம்பத்தில் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அக்கோயில்களில் பல இன்று சைவ மக்களால் கைக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் பல நாட்களைக் கொண்ட வருடாந்த சடங்குகளில் ஒரு நாள் மாத்திரம் பல மட்டுப்படுத்தல்களுடன் வேடர்களுக்கு ஒதுக்கப்படும் நிலை காணப்படுகிறது.

## கல்வி

கல்வியுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களைக் கல்வித்துறை என்பது குறிக்கிறது. இதில் கல்விசார் அதிகாரிகள், பயிற்சி நிறுவனங்கள், பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் அடங்கும். கல்வி என்பது குழந்தைகளை, உடல் மற்றும் மன வளர்ச்சியில் அறிவு, நல்லொழுக்கம் ஆகிய மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு. இளைய தலைமுறையை முறையாக வழி நடத்துவதிலும், சமுதாயத்தில் பங்களிப்பு செய்ய வைப்பதிலும் கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. கல்வி என்பது ஒரு சமூக நிறுவனம். அறிவு, திறமை போன்றவற்றையும் தந்து ஒரு புதிய சமூகத்தை உருவாக்கி பண்பாடு, நடத்தை, போன்றவற்றையும் தந்து மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றம் அடையச் செய்கிறது. இது திறன்கள், தொழில்கள், உயர்தொழில்கள் என்பவற்றோடு, மனம், நெறிமுறை, அழகியல் என்பவை சார்ந்த வளர்ச்சியையும் சமுதாய வளர்ச்சியில் பங்கு பெறச் செய்கிறது. பண்டைக் காலங்களில், மக்கள் ஒருவருக்கொருவர் பார்த்துப் பழகியும், பேச்சு வழக்கிலும், கதைகள் சொல்லியும், கேட்டும் அறிவை வளர்த்துக் கொண்டனர். இந்தப் பின்னணியிலிருந்து கல்வி முறைகள் உருவாகியுள்ளன. கல்வியினால் ஒரு நாட்டின் பொருளாதார நிலையில் மாற்றம் ஏற்படுகின்றது. அது போலவே, பொருளாதார நிலையும் கல்வியின் தரத்தைக் கட்டுப் படுத்துகின்றது. அனைவருக்கும் தரமான கல்வி அளித்தால் அது நல்ல பொருளாதார வளர்ச்சியை உருவாக்கும்.

காலனியத்துக்கு முன்னர் வாகரை வேடர்கள் பொதுக் கல்வியில் நாட்டம் செலுத்தவில்லை. தமது முன்னோர்களின் வழியாக தொடர்ந்து வந்த அறிவு, பழக்கவழக்கங்கள், மரபுகள், பண்பாடு போன்றவற்றை வாய்வழியாகவும் இயற்கையில் கிடைத்தவை மூலமும் தமது பரம்பரையினருக்கு கையகப்படுத்தி வந்துள்ளனர். காலனித்துவக் காலத்தில் அந்நியர்கள் வேடர்களை தமது தொழில்களில் ஈடுபடுத்துவதற்காகக் கல்வியறிவை ஊட்டியுள்ளனர். காலனித்து

வத்திற்குப் பின்னர் அவ்வாறான நிலை காணப்படவில்லை. அவர்களிடத்தில் கல்வி கற்று ஏனைய சமூகத்தவர்களுடன் கலந்து முன்னேற்றம் பெற்றவர்களாகச் சிலர் சென்றுவிட, எஞ்சிய அதிகமான வேடர்கள் கைவிடப்பட்டார்கள். அவர்களில் அதிகமானோர் மீண்டும் அவர்களது வேட்டையாடல் போன்ற தொழில்களைச் செய்ய முடியாதவர்களாகக் காணப்பட்டனர். அதனால் சமூகத்தின் அடிநிலை மக்களாக மாறினார்கள். அதுவே தொடர்ந்தது. தற்காலத்தில் வாகரை வேடர்கள் கல்வி மீது நாட்டமற்றவர்களாகவும் தமது குழந்தைகளைக் கல்வியில் ஈடுபடுத்தாதவர்களாகவும் காணப்படுகின்றனர். அதனால் அவர்கள் மத்தியில் பல தாக்கங்கள் காணப்படுகின்றன. கல்வி கற்பதனால் கிடைக்கக்கூடிய பயன்கள் எதுவும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. குறிப்பாக அரச தொழில்வாய்ப்புகள், வியாபார முன்னேற்றங்கள், ஏனைய சமூகங்களுடனான தொடர்பு, தமது மரபுகள் பண்பாடுகள் பற்றிய தேடல், தமது சந்ததியினர்களின் எதிர்காலம் பற்றிய சிந்தனை போன்ற எதுவுமற்றவர்களாக காணப்படுகின்றனர்.

## முடிவுரை

வாகரைப் பிரதேசம் கடந்தகாலத்தில் இடம்பெற்ற உள்நாட்டுப்போர் காரணமாக மிகவும் பின்தங்கிய பிரதேசமாகக் காணப்படுகிறது. இங்கு வாழும் மக்கள் அனைவரும் யுத்தம் காரணமாக தமது வாழ்வியலை இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இங்குத் தமிழ் மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்களுடன் கலந்தும் தனித்தும் வேடர் சமூகம் வாழ்கிறது. ஆதிக்கம் அல்லது அதிகாரம் செலுத்தும் மக்கள் குழுவாக அல்லது உயர் வர்க்கமாக ஏனையோர் காணப்பட வேடர் சமூகம் விளிம்புநிலை மக்களாகவே தொடர்ந்தும் காணப்படுகின்றனர். அதனை வாகரைப் பிரதேசத்தில் நிலவும் அரசியல், பொருளாதார, சமய, கல்வி நிலைகளினூடாக அறிய முடிந்தது. தொடர்ச்சியான இப்போக்கு காரணமாகக் குறித்த வேடர் சமூகம் பாதகமான தாக்கங்களை எதிர்கொள்கின்றமை ஆய்வினூடாக வெளிப்பட்டுள்ளது. காலஓட்டத்தினூடே இடம்பெற்ற அரசியல் மற்றும் அதிகார மாற்றங்களும் ஒவ்வொரு காலத்திலும் உருவாகிய புதிய சமூகப் பிரிவினர்களும் சமூக சக்திகளும் இத்தாக்கங்களுக்கு காரணமாக அமைந்துள்ளன. இந்நிலை தொடருமானால் அவர்களது எதிர்காலம் மோசமாக பாதிக்கப்படும். எனவே மனிதாபிமான அடிப்படையில் அதனை தடுக்க வேண்டும். வாகரை வேடர்களும் மனித சமூகத்தின் வரலாற்று வழியில் முக்கியமானவர்கள் என்பதைத் தெளிவுறுத்த வேண்டும். அவர்களின் மரபுகள் பண்பாடுகள் பேணப்பட வேண்டும். அவர்களது சமூகத்தின் ஒவ்வொருவரும் சுயகௌரவத்துடன் வாழ்வதை உறுதிப்படுத்த வேண்டும். அவர்களின் ஒவ்வொரு வாழ்வியல் கூறுகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். இந்நாட்டின் அனைத்து அம்சங்களிலும் அவர்களுக்கும் சமவுரிமை உள்ளதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். வாகரை வேடர்களின் விளிம்பு நிலைப் போக்கை மாற்றியமைக்க நாட்டில் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.